REGD. No. M. 6311

தனி இதழ்
ஒரு அணா
இலங்கையில் 10 சதம்

மலர் 1] [இதழ் 201

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சந்தா விபரம்
உள்நாடு (இலங்கை உட்பட)
ஆண்டு ரூ. 24—0—0
6 மாதம் ரூ. 12—0—0
3 மாதம் ரூ. 6—0—0
வெளிநாடு:
ஆண்டு ரூ. 30—0—0
6 மாதம் ரூ. 15—0—0
3 மாதம் ரூ. 7—8—0

"THE NAM NADU" A TAMIL DAILY: THE OFFICIAL ORGAN OF: THE D.P.F

சென்னை: தைதி 22உ வியாழன் (4-2—54) ★ ★ ★ வெளியூர்: தைதி 23உ வெள்ளி (5—2—54)

திராவிட நாடு—டில்லியின் திகில்!

'இந்தி வெறி' நாட்டுப் பிரிவினைக்கு ஆக்கம் தருகிறது!

—(:)—

டில்லி தலைநகர் தெற்கே தள்ளி வர வேண்டும்

அங்கே ஆலைகள்! இங்கே குடிசைத் தொழில்கள்!

'நம்மவர் பகை உணர்ச்சிக்கு இதுவே காரணம்!'

மதுரை, பிப். 3—

"வட நாட்டினருக்கும், தென்னாட்டினருக்கும் பகைமை உணர்ச்சி வளர்ந்து வருவதற்குக் காரணம், இந்தி மொழியாளர்களின் மொழி வெறிதான்."

"குடிசைத் தொழிலை ஆதரிக்கிறோம் என்று கூறி, தமிழகத்தில் பெரிய தொழில்களை நிறுவுவதற்குத் தடை செய்கிறது, சென்னை அரசு; ஆனால், வடநாட்டில், இத்தொழில்களெல்லாம் பெருகி அந்த நாட்டுப் பொருள்கள் இங்கு வந்து குவிகின்றன; ஆனால், நம்மவர்களுக்கு அவர்களிடத்தில் பகைமை உணர்ச்சி வளர்ந்து வருகிறது."

இவ்வாறு 'தமிழ் நாடு' இதழ் 'வடக்கும், தெற்கும்,' என்ற தலைப்பிட்டு எழுதியுள்ள தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

மேலும் அதில் குறிப்பிட்டிருப்பதாவது:—

"வடக்கு வளர்கிறது; தெற்கு தேய்கிறது — இது தான் இன்று தமிழகத்தில் எங்கும் மேடைகளிலும், ஏடுகளிலும் கூறப்படும் செய்தியாகும். டில்லி, வடக்கே வெகு தொலைவிலிருப்பதால் அங்கே நமது குரல் கேட்பதில்லை என்றும், வடநாட்டார் அண்மையில் இருப்பதால் அவர்கள் எல்லா நலன்களையும் அடைகிறார்கள் என்றும் பல கழகங்கள் கூறுவதை நாம் இன்று கேட்கிறோம்.

"ஐந்தாண்டுத் திட்டத்திலும் மற்ற தொழில் பெருக்கத் திட்டங்களிலும் தென்னிந்தியா புறக்கணிக்கப்படுகிறதென்றும் பலர் நினைக்கின்றார்கள். இதன் விளைவாக தமிழ் மொழியின்பால் பற்று அதனை மொழிவழிப் பகுதிகளும் 'திராவிட நாடு' என்ற பெயரில் தனித்தியங்க வேண்டுமென்ற புது எழுச்சி அண்மையில் வலுவடைந்து வருகிறது. இந்த எழுச்சியின் காரணமாக நம் தமிழ் நாட்டில் பகை உணர்ச்சி வளர்ந்து வருகிறது. அவ்வுணர்ச்சியினால் ஒருக்கால் இந்தியாவின் ஐக்கியம் குன்றிவிடுமே என்று வடநாட்டாரும் நினைக்கத் தொடங்கிவிட்டனர்."

'காந்தி ஜனதா' உதயம்!

—:-:—

காங்கிரசுக்கு ஒரு பதில் கட்சி!

லூதியானா, பிப். 3—

பஞ்சாபில் முன்னாள் அமைச்சராக இருந்தவரான ராம் சர்மா என்பவரும், காங்கிரசிலிருந்து விலகிய 300 காங்கிரஸ்காரர்களும் காங்கிரசுக்கு எதிராக 'காந்தி ஜனதா' என்னும் பெயரில் அரசியல் கட்சி ஒன்றைத் துவங்கியுள்ளனர்.

சமுதாயப் பொருளாதார சமத்துவத்துக்குப் பாடுபடுவதே அதன் நோக்கமாகும்.

இந்த புதியக் கட்சியின் பொதுச் செயலாளரான ராம் சர்மா, அக்கட்சிக்கு 12 சட்டசபை உறுப்பினர்களின் ஆதரவு இருப்பதாகவும், அடுத்த சட்டசபையில் இந்தக் கட்சியைச் சார்ந்து 25 உறுப்பினர்கள் இருப்பர் என்றும் அறிவிக்கிறார்.

சிப்பாய் கலகத்திற்கு முன்பே இந்தி—உருது பிணக்கு இருந்தது

—o—

அதுபற்றிய விசாரணை குழு அறிக்கை கிடைத்துள்ளது

ஐதராபாத், பிப். 1—

பீகார் சட்ட மன்றங்களில் இந்தியை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்று பாட்னா மக்கள், முன்பு கிளர்ச்சி செய்தனர். அதன் பலனாக, அயோத்தியின் ஆட்சி மொழியாக இந்தியை ஒப்புக் கொள்ளலாமா என்ற பிரச்னை கிளம்பிற்று.

'பீகார் அறநிலையங்களிலும், ஆட்சி மன்றத்திலும் ஏன் இந்தியை ஆட்சிமொழியாக்க வேண்டும்' என்பதற்கான காரணங்களைக் காட்டி சில பாட்னா நகரவாசிகளால் தரப்பட்டுள்ள விண்ணப்பம் ஒன்றை, இந்திய சர்க்கார், அயோத்தி பிரதம கமிஷனருக்கு அனுப்பி அவருடைய கருத்தைக் கேட்டிருந்தது.

அயோத்தியில் இருந்த சர்க்கார் அதிகாரிகள், வங்காள சர்க்கார் அதிகாரிகளுடன் கலந்துகொண்டும், இந்திய சர்க்கார் கருத்துக்கிணங்கவும் 'சமஸ்கிருதமாக உருவாக்கப்பட்டுள்ள ஒரு போலி மொழியை' இந்தி மொழி என்ற பெயரால் திணிக்கக்கூடாது என்று கூறிவிட்டனர்.

சர்க்கார் நிபுணர்கள் உருது மொழிக்குச் சாதகமாகவே கருத்தறிவித்திருந்தனர். இதற்கு எதிராக உருதுக்குச் சாதகமாக அயோத்தி பிரதம கமிஷனரும், வங்காள சர்க்காரும், ஆதரவைத் தெரிவித்திருந்தனர்.

இந்த உண்மையை, இந்து கடைபெறுகிற வரலாற்றுச் சுவடி ஆய்வுக் குழுவின் 30-வது மாநாட்டில் லக்னோ பல்கலைக் கழகத்தில் பணிபுரியும் சந்திரலால் சட்டர்ஜி அறிவித்தார்.

1875—76-ல், நடைபெற்ற விசாரணை குழு பற்றிய சில கடிதங்கள் இப்பொழுது கிடைத்துள்ளன என்றும், அந்தக் கடிதங்களில் இருந்து அந்தக் காலத்திய 'உருது - இந்தி' பற்றிய பிரச்னை விவரம் காணக் கிடைக்கிறது என்றும் அவர் எடுத்துக் காட்டியுள்ளார்.

நிர்வாக நலனையும், அரசியல் நோக்கத்தையும் கொண்டுதான் அக்காலத்தில் இருந்த அதிகாரிகள் இந்திக்கு ஆதரவு தர மறுத்தனர் என்று தனது கருத்தையும் மாநாட்டில் கூறினார்.

ஜெர்மனி விவகாரம் ரஷியா திட்டம்

அமெரிக்கா நிராகரித்தது

பெர்லின், பிப். 3—

பெர்லின் மகாநாட்டில் சோவியத் அயல் நாட்டு மந்திரி ஒரு புதுப் பிரேரணையைத் தாக்கல் செய்தார்.

இரண்டாவது உலக யுத்தத்தில் கலந்துகொண்ட எல்லா தேச நாடுகளையும், ஜெர்மனியையும் சேர்த்து இவ்வாண்டு அக்டோபர் மாதத்துக்குள் சமாதான மாநாடு நடத்தவேண்டுமென்பதே இப்பிரேரணை.

ஜெர்மனியுடன் சமாதான ஒப்பந்த நகலை, அயல் நாட்டு மந்திரிகளின் உதவி மந்திரிகள், மூன்று மாதங்களுக்குள் தயாரிக்க வேண்டுமென்று அவர் கூறினார்.

ஜெர்மன் விவகாரப் பைசலுக்கு ரஷ்யா நேற்று சமர்ப்பித்த திட்டத்தை இன்று பெர்லின் மகாநாட்டில் அமெரிக்கா நிராகரித்தது. ஆயுதபாணியான மீண்டும் ஐக்கியமடைந்த ஜெர்மனி மேற்கு ஐரோப்பாவுக்கு மிகவும் ஆபத்தானது என்று யு. எஸ். அரசாங்க மந்திரி டல்லஸ் எச்சரித்தார்.

---

437 ஆதிவாசிகள் — தண்டிக்கப்பட்டனர்

—[o]—

15 நாள் முதல் 1 திங்கள் வரை சிறைவாசம்

நாசிக், பிப். 3—

சர்க்கார் புறம்போக்கு நிலங்களில் அனுமதி இல்லாமல் பயிர் செய்யும் அறப்போராட்டத்தில் கலந்துகொண்ட 437 ஆதிவாசிகளை விசாரணை செய்த மாஜிஸ்திரேட் 15 நாள் முதல் 1 திங்கள் வரை சிறை தண்டனை கொடுத்துள்ளார். தண்டனை பெற்றவர்களில், பெண்களும் உள்ளனர். முதல் மூன்று நாள் அறப்போராட்டத்தில் மட்டும் கலந்துகொண்ட ஆதிவாசிகளின் தொகையாகும் இது.

தொடர்ந்து அறப்போர் நடைபெறுகிறது. ஆதிவாசி ஆண்கள் அனைவரும் சிறைசென்ற பின், அறப்போரில் பெண்கள் தலையிடவென, பெண்களைத் திரட்டி வைத்து இருக்கிறது ஆதிவாசி அறப்போராட்டக் குழு.

இந்த அறப்போராட்டத்திற்கு, எந்த ஒரு அரசியல் கட்சிக்கும் எந்தவிதமான தொடர்பும் கிடையாது என்று சொல்லப்படுகிறது. இந்த அறப்போர் ஜனவரி 27-ந் தேதியிலிருந்து நடைபெறுகிறது.

எகிப்தில் தம் கட்சி ஆட்சியை நிலைநாட்ட முயன்றனராம்

44 கம்யூனிஸ்டுகள் மீது நடவடிக்கை பாய்ச்சல்

கெய்ரோ, பிப். 3—

எகிப்தில் கம்யூனிஸ்டு ஆட்சியை அமைக்க முயன்றனர் என்று குற்றம் சாட்டி, இராணுவத் தலைவர் நகீபால் 44 கம்யூனிஸ்டுகள் மீது வழக்குத் தொடுக்கப்பட்டு இருக்கிறது.

அதில் 16 மாணவர்களும், 15 தொழிலாளர்களும், 9 சர்க்கார்-தொழில் நிலைய ஊழியர்களும் உள்ளனர்.

சந்திரமண்டலபிரயாணம்

100 கோடி பவுன் செலவாகும்

லண்டன், பிப். 2—

சந்திரமண்டலப் பிரயாணத்திற்காக 100 கோடி பவுன்களுக்கு மேல் ஆகும் என்று கூறப்படுகிறது.

இப்போது ராக்கெட்டுகள் போகும் வேகத்தில் சந்திரமண்டலம் போய்ச்சேர 5 நாட்களும், சுக்கிரனுக்குப் போய்ச் சேர 5 மாதங்களும், செவ்வாய்கிரகம் போய்ச்சேர 8 மாதங்களும் பிடிக்கும் என்றும் கூறப்படுகிறது.

பிச்சைக்காரருக்கு விடுதி

சென்னை, பிப். 2—

ஆவடியில் 15-ந் தேதி முதல் பிச்சைக்காரர் விடுதி ஒன்று ஆரம்பமாகும். இந்த விடுதியில் 500 பேர் தங்கலாம்.

உதவி போலீஸ் சூப்பிரண்டு அந்தஸ்திலுள்ள ஒரு போலீஸ் அதிகாரியின் நிர்வாகத்தில் இது இருக்கும்.

நகரத்திலுள்ள பிச்சைக்காரர்களை இவ்விடுதிக்கு அனுப்ப சென்னை போலீசார் ஒரு இயக்கம் ஆரம்பிப்பர். சர்க்கார் உத்தரவுகள் இதுபற்றி சீக்கிரம் பிறப்பிக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஷேக் அப்துல்லா காவல் காலம் நீடிப்பு

ஜம்மு, பிப். 2—

காஷ்மீர் சர்க்கார் பொது ஜன பாதுகாப்பு சட்டத்தின் கீழ் ஷேக் அப்துல்லா, பெக் ஆகியோரை மேலும் இரண்டு மாதத்திற்குத் தொடர்ந்து காவலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

ஷேக் அப்துல்லாவும், பெக்கும் சென்ற ஆண்டு 9-ந் தேதி கைது செய்யப்பட்டனர். இந்தக் காவல் காலம் நீடிக்கப்பட்டது மூன்றாம் முறையாகும்.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 4—2—1954 வியாழன்

கோமாளியின் குதர்க்கம்!

சில நாளைக்கு முன்பாக ரயில்வே துணை அமைச்சர் பொங்கல் நாளுக்கு, தம் சொந்த ஊர் திரும்பி இருந்தார். வந்ததும் வந்தோமே, ஊர் சுற்றிப் போவோமே என்று அருப்புக்கோட்டைவரை சென்று டெல்லி திரும்பினார். மூப்படைந்த மந்திரிகளே தன்னடக்கம் இல்லாமல், மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளில் ஒன்றெனக் கொண்டு எதிர்க் கட்சியினரைத் தாறுமாறாகத் தாக்கித் திரிந்து வரும் பொழுது, இளைஞராக இருக்கிற இந்தச் சின்ன அமைச்சர் துள்ளிக் குதித்துத் துடுக்குத்தனமாகப் பேசாமலிருந்தால் அவர் சிரசு சுக்குநூறாக வெடித்துவிடாதா என்ன? வாயில் வந்தபடி எல்லாம் வசைபாட மறந்துவிட்டால், அவர் அமைச்சராக இருந்து ஆற்ற வேண்டிய பணிகளின் ஒன்று குறைந்து காணத்தானே காணும்! பிள்ளைப் பருவத்திலிருந்து அவர் கற்றுள்ள வித்தையும் அதுதானே?

பார்லிமெண்டு உறுப்பினர் ஆகி, துணை அமைச்சர் பதவியில் அவர் அமர்த்தப்படுவதற்கு முன்பாக, அந்தக் காலத்தில் அவர் அரசியல் ஆக்கக் குழு உறுப்பினராக இருந்திருக்கிறார். அந்த மன்றத்தில் உத்திர பிரதேச இந்தி வெறியர் ஒருவர் வெறியாட்டம் போட்டபோது, அந்தப் பேய்த்தனத்திற்கு, 'இந்தி ஏகாதிபத்தியம்' என்று பெயர் கொடுத்து, காரசாரமாகக் கண்டித்து, இந்தி வெறியரின் மூக்கை அறுத்தவர் இது ஒழலூரார்தான். அன்று அவர் ஒரு சின்ன அமைச்சராக இல்லாமல் சாதாரண உறுப்பினராக இருந்தார். வடநாட்டு இந்தி வெறியர்களின் 'ஏகாதிபத்திய' சதிச் செயல் அவர் கண்களுக்கு அப்பொழுது விளக்கமாகப் பட்டது. கண்களில் பட்டதோடு நின்றுவிடாமல் அது, அவருடைய கருத்திலும் உறுத்தியது. எனவே, அந்த வெறித்தனத்தில் மறைந்து கிடக்கும் ஏகாதிபத்திய உணர்வை, கண்டித்து உலகத்தவருக்கு உணர்த்தினார். ஆனால், இப்பொழுது அவர் ஒரு துணை அமைச்சராக இருந்து வருகிறார். ஆதலால், அவர், அந்த நாள் தாம் கண்டு கண்டித்த வடநாட்டார் ஏகாதிபத்தியக் கொள்கையை இன்று தீவிரமாக மறுக்க முனைகிறார். ஒரே நபரிடம் காணப்பெறும் இந்த முரண்பாட்டில் நாம் ஆச்சரியம் கொள்ளத்தக்கது ஒன்றும் இல்லை. அவருக்கு ஏற்பட்டுள்ள மன மாற்றத்திற்குள்ள ஒரே ஒரு காரணம் அவர் பெற்றுள்ள சின்ன அமைச்சர் பதவிதான் என்பது வெளிப்படை.

ஒழலூரார் அருப்புக்கோட்டைப் பக்கம் போனபோது ஏதோ ஒரு பொதுக்கூட்டத்தில் 'வடக்காவது—தெற்காவது—வடக்கு தென்னாட்டைச் சுரண்டுவது என்று கூறுவதெல்லாம் வெறும் அபத்தம்—மதுரை திருச்சிக்கு வடக்கு—எனவே, வடக்கு—தெற்குப் பேச்சிற்குப் பொருளே கிடையாது' என்று, பதவியால் தம் பெற்றுள்ள 'வடக்கு-தெற்கு' அரிச்சுவடியை ஒப்பித்துவிட்டுப் போயிருக்கிறார்.

அவர் பேச்சில் அறிவுடைமையோ, நாட்டின் சூழ்நிலையைத் தெரிந்துகொண்டுள்ள நினைப்போ, இருப்பதாக ஒருவரும் கொள்ளுவதற்கில்லை. ஏதோ தாம் வாங்குகிற சம்பளத்திற்குக் கைமாறாகவும் ஊதியம் தருகிறவர்களின் உள்ளம் பூரிப்புக்காகவும் எதையாவது பேசித் தொலைக்க வேண்டுமே என அவரும் பேசியிருக்கிறார் என்றுதான் அனைவரும் ஒருமனதாக முடிவிற்கு வருவர்.

'மதுரைக்குத் திருச்சி வடக்கு' என்று அவர் கேலியாகப் பேசினதில் துளியும் பொருள் கிடையாது. ஒவ்வொரு வீட்டிற்கும் வடக்கு-தெற்கு உண்டு. மகத்தான உண்மையை அவர் கண்டுபிடித்துக் கூறிவிட்டதுபோல அவர் கர்வமாகப் பேசுவது வியப்பாகத்தான் இருக்கிறது.

வடக்கே உள்ள ஒரு மாநிலத்திற்கு இப்பொழுது 'உத்திரப் பிரதேசம்' என்றே பெயரிடப்பட்டு இருக்கிறது இந்தப் பிரதேசம்தான், யூனியன் சர்க்காரை அரசியலில் ஆட்டிப் படைக்கிறது என்ற உண்மையை, இந்த ஒழலூரார் அறியாமலிருக்க நியாயமில்லை. இந்தப் பிரதேசத்திற்கு வெள்ளை ஏகாதிபத்தியம் இட்டிருந்த பெயர் 'ஐக்கிய மாகாணம்' என்பதாகும். 'மதுரைக்கு வடக்கு திருச்சி' என்று ஒழலூரார் கண்டுபிடித்த நியாயம் வடநாட்டுக்குத் தெரிந்திருந்தால், ஒரு திசையின் பெயரை குறிப்பிட்ட ஒரு 'பிரதேசத்திற்கு' சிறப்புப் பெயராக வைக்க முன்வந்திருக்கமாட்டார்கள்.

ஏற்கனவே மத்திய மாகாணம என்று இருந்தது 'மத்திய பிரதேசம்' என்று இப்பொழுது மாற்றப்பட்டு இருக்கிறது. அதற்குத் தெற்கில் உள்ள பகுதிகளுக்கு 'தட்சண பீட பூமி' என்று அன்றும், இன்றும், என்றும் வழங்கப்பட்டு வருகிறது. தட்சணம் என்ற வட சொல்லிற்குத் தெற்கு என்றுதான் பொருள்.

வடமேற்கு எல்லை புறம்—வடகிழக்கு எல்லைப்புறம் என்று குறிப்பிடப்படும இரு பகுதிகளையும இந்தச் சின்ன அமைச்சர் அறிந்தே இருக்கவேண்டும். இந்த நில நூல் விவகாரம் கனம் குட்டி அமைச்சருக்குப் புரியாது என்பதானால், அவர் பதவியிலுள்ள இரயில்வே இலாக்காவிலிருந்தே உதாரணங்களைக் காட்டுகிறோம். அப்பொழுதாவது அவர் வடக்கு—தெற்கு விவகாரத்தில், தாம் கொண்டுள்ள தவறான கருத்தைத் திருத்திக்கொள்ள முன்வரட்டும். கேட்கின்ற மக்கள் அப்பொழுது கைதட்டிச் சிரிப்பதற்காகப் பிதற்றும் கோமாளிப் பேச்சுகளை, இனியாவது பேசாமல் இருக்கட்டும்!

வெள்ளையர் ஆட்சி காலத்தில் 'தென்னிந்திய இரயில்வே' என்று தென்னாட்டில் ஓடும் ரயில் வண்டித் தொடருக்குப் பெயரிடப்பட்டிருந்தது. இதேபோல், 'சென்னை தென் மராட்டா ரயில்வே' என்றும் தென்னாட்டில் மற்றொரு பகுதியில் ஓடும் ரயில் வண்டித் தொடருக்குப் பெயர் வைக்கப்பட்டிருந்தது இப்பொழுது அந்த இரு தொடர்களுக்கும் இருந்த தனித்தனிப் பெயர்களை மாற்றி 'தெற்கு ரயில்வே' என்று ஒரே பெயர் சூட்டப்பட்டிருக்கிறது. 'மதுரைக்கு வடக்கு திருச்சி' என்று திசை குறிப்பிட தாம் கொண்டுள்ள நியாயத்தை இந்தத் 'தெற்கு ரயில்வே' விஷயத்திலும் உடனடியாகக் காட்ட இந்தக் குட்டி அமைச்சர் முன்வர வேண்டும். இது அவரால் மாற்றி அமைக்கக் கூடிய காரியமல்ல என்பதை நாம் அறிவோம். இவ்வளவும் நாம் எழுதுவது அவர் பேச்சில் உள்ள கோமாளித்தனத்தைச் சுட்டிக்காட்டவே அல்லாது, குட்டி அமைச்சரின் பதவிப் பேச்சுக்குப் பதில் கூற அல்லவே அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம். நிற்க,

இந்தியத் துணைக் கண்டத்தில் வடக்கு—தெற்குக்குள்ள வரையறையை நில நூல்—வரலாறு சான்று காட்டி மேலே மெய்ப்பித்துள்ளோம். இனி, 'வடக்கு—தெற்கு' என்ற பேதம் நாட்டில் எந்த அளவு பரவி உள்ளது என்பதையும், டெல்லி காங்கிரஸ் அதிகார வர்க்கத்தினர் கருத்தை அது எந்த அளவு குடைகிறது என்பதையும் நாளை எழுதுவோம்.

தூத்துக்குடி சதி வழக்கு

8ந் தேதிக்கு ஒத்திவைப்பு

திருநெல்வேலி, பிப். 1—

இன்று விசாரணைக்கு ஒத்திவைக்கப்பட்டிருந்த தூத்துக்குடி சதி வழக்கை விசேட முதல் வகுப்பு மாஜிஸ்திரேட் எஸ். அரிராய்டு இம்மாதம் 8-ந் தேதிக்கு ஒத்திவைத்தார் அன்றைய விசாரணை தூத்துக்குடியிலேயே நடைபெறும்.

இவ்வழக்கில் 1, 4, 5-வது எதிரிகளான கே. வி. கே. சாமி சிவசாமி, நடராசன் ஆகியோரின் சார்பில் வழக்கறிஞர் எம். என். நெல்லையப்பபிள்ளை ஒரு மனுவைச் சமர்ப்பித்து, மேற்படி எதிரிகளுக்கு முதல் வகுப்புத் தரும்படி கோரினார்.

மனுவை ஸ்பெஷல் பிராசிகியூட்டர் எதிர்க்கையில், விசாரணை இன்னும் முடியவில்லை என்றும், ஏற்கெனவே இம்மாதிரிக்கை நிராகரிக்கப்பட்டிருப்பதாகவும் சொன்னார்.

மாஜிஸ்திரேட் தமது முடிவை இம்மாதம் 10-ந் தேதிக்கு ஒத்திவைத்தார்.

பெங்களூரில் பார்லிமெண்ட்

வட நாடு-தென்னாடு பேதம் நீங்க இது புதுவழியாம்!

பெங்களூர், பிப். 3—

டில்லி பாராளுமன்றத்தை ஆண்டுக்கொருமுறை பெங்களூரில் கூட்டலாமென்று பெங்களூரிலும், டில்லியிலும் யோசனை இருந்துவருவதாக விஷயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன

வட இந்தியருக்கும்—தென் இந்தியருக்கும் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தத்தான் இந்த ஏற்பாடாம்

மைசூர் சட்ட மன்றத்திற்காக 50 லட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுவரும் கட்டிடத்திலேயே ஆண்டுக்கொரு முறை பாராளுமன்றத்தைக் கூட்ட முடியும என்று கூறப்படுகிறது

இவ்வாறு, இங்கு பாராளுமன்றத்தை கூட்டுவதால் செலவு அதிகம் ஆகாது என்று சிலர் கருதுகின்றனர். இவ்வாறு கூட்டப்படுவதால், எதிர்காலத்தில் இந்தியாவின் ஒற்றுமைக்கு நல்ல பலனளிக்குமென்று நம்பப்படுகிறது.

வடக்கு — தெற்கு என்ற உணர்ச்சிகளை மாற்றுவதே இதன் நோக்கமாம்.

கங்கைக் கரையில் கோரக் காட்சி

கும்பமேளாவில் பிணங்கள் குவிந்தன

அலகாபாத், பிப். 3—

அலகாபாத்தில் நடைபெறும் கும்பமேளா திருவிழாவில் லட்சோபலட்சம் மக்கள் கலந்துகொண்டு, மிகுந்த தொல்லைகளாகி, 500 பேர் நசுக்கப்பட்டு கொல்லப்பட்டனர்; ஆயிரத்திற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்தனர்.

அல்லாமிலிருந்து நாகர் ஜாதியினர் ஆடையில்லாமல் ஊர்வலமாக வந்ததை பார்க்கச் சென்றபோதுதான் இவ்விபரது நேர்ந்தது. பாதுகாப்புக்கு வந்திருந்த போலீசார், பக்தர்கள் மீது தடியடிப் பிரயோகம் செய்து கூட்டத்தை விலக்க நேர்ந்தது

அந்த நிர்வாணச் சாமியார்கள் கும்பலைக்கண்டு பயந்து, கூட்டத்தினர்மீது வேலையும், ஈட்டியையும் வீசினார்கள்

கங்கை நதிக்கரை ஒரே பிணக்காடாகக் காட்சியளித்ததாகச் சொல்லப்படுகிறது.

அன்றைய தினம் மட்டும் 40 லட்சம் பேர் கங்கையில் குளித்தனராம்! அவர்கள் அனைவரும் மொட்டையடித்துக் கொண்டதாகச் சொல்லப்படுகிறது. வெட்டப்பட்ட மயிரை எடுத்துச் செல்லுவதில் 12 படகுகள் முனைந்திருந்தனவாம்!

பண்டித நேரு நிகழ்ச்சி நடந்த இடத்திற்குச் சென்றார். இறந்தோரின் குடும்பத்திற்கு அனுதாபம் தெரிவித்தார்.

கோயிலுக்குள் நுழைய ஆதிகுடியினர் அறப்போர்

காட்மாண்டு, பிப். 3—

இங்கிருந்து 4 மைல்களுக்கப்பாலுள்ள பிரபலமடைந்துள்ள பசுபதி நாதர் கோவிலுக்குள் நுழைய தங்களுக்கும் உரிமை உண்டு என்பதை நிலை நிறுத்துவதற்காக ஆதிக்குடியினர் கடந்த 7 நாட்களாக கோவில் வாசலில் அறப்போர் நடத்தி வருகிறார்கள் 6 பெண்கள் உள்பட 50 பேர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். நேபாள சட்டப்படி ஷெட்யூல்டு வகுப்பினர்கள் கோயிலுக்குள் நுழைய அனுமதிக்கப்படுவதில்லை. கோயில் வாயிலில் போலீஸ் பாதுகாப்பு வைக்கப்பட்டுள்ளது.

பொதுச் செயலாளர் அண்ணாதுரைக்கு வரவேற்பு

விழுப்புரம் நகர மன்றம் முடிவு

1—2—54ல் நடைபெற்ற விழுப்புரம் நகர மன்றக் கூட்டத்தில் 14 — 2—54ல் தி மு கழக பொதுச் செயலாளருக்கு நகர மன்ற சார்பில் வரவேற்பு இதழ் வாசித்தளித்து, சண்முகம் பூங்காவிலிருக்கும் நகர மன்றப் படிப்பகத்தில் திரு வி. க படத்தை திறந்து வைப்பது என டாக்டர் தியாகராசன் கொண்டு வந்த தீர்மானம் ஏகமனதாக நிறைவேறியுள்ளது.

எரிமலை வெடித்தது

டோக்கியோ, பிப். 3—

ஜப்பானில் டோக்கியோவுக்கு 91 மைலிலுள்ள 'அசாமா' என்ற எரிமலை வெடித்து 400 அடி உயரம் வரை பாறைகளையும், கரும் புகையையும் வீசிக்கொண்டிருக்கிறது இது ஜப்பானிலேயே மிக பயங்கரமான எரிமலையாகும்.

தெ. கி. ஆசிய பிரதமர்கள் மாநாடு

—0—

எல்லா நாடுகளும் கலந்துகொள்ளும்

கொழும்பு, பிப். 3—

கொழும்புவில் ஏப்ரல் 28-ந் தேதி தென் கிழக்கு ஆசியப் பிரதம மந்திரிகள் மாநாட்டைக் கூட்டுவதற்கு இந்தியா, பாகிஸ்தான், பர்மா, இந்தோனேஷியா, இலங்கை ஆகிய நாடுகளும் சம்மதம் தெரிவித்துவிட்டதாகத் தெரிகிறது

இலங்கை வெளிநாட்டிலாகா இதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது. பிரதம மந்திரிகள் முக்கியமான பல இடங்களுக்கு விஜயம் செய்வதற்கும்; பல சமூக நிகழ்ச்சிகளுக்கும் ஏற்பாடு செய்யப்படுகின்றன.

காங்கிரஸ் தலைவரைக் கொல்ல முயற்சி

மூன்று முறை சுட்டனர்

ஜலந்தர், பிப். 3—

பஞ்சாப் காங்கிரஸ் தலைவரான ஞானி குருமுக் சிங் முசாபரை சுட்டுக் கொல்ல முயற்சிக்கப்பட்டது. கபுர்தலாவிலிருந்து ஜலந்தருக்கு அவர் பிரயாணம் செய்வதற்காகத் தயாராக இருந்த புகை வண்டிப் பெட்டியை நோக்கி மூன்று முறை துப்பாக்கியால் சுடப்பட்டது.

இந்தச் செய்தியை அவர், ஜலந்தர் வந்து சேர்ந்ததும் போலீஸ் டிப்டி கமிஷனரிடம் அறிவித்தார்.

ஆகாகான் ஆலாபரம்!

கராச்சி, பிப். 3—

தங்கத்தைவிட விலை உயர்ந்த உலோகமான பிளாட்டினத்தை வைத்து, ஆடம்பரமாக அலங்கரிக்கப்பட்ட ஒரு மேடையில் ஆகாகான் எடைபோடப்பட்டார். அவருடைய எடை 215 ராத்தல். சிக்கனத்தை முன்னிட்டு 14 ராத்தலுக்கு ஒரு அவுன்ஸ் வீதம் எடைபோடப்பட்டதில் 15-1/3 அவுன்ஸ் பிளாட்டினம் ஆயிற்றாம்.

இந்த விழாவிற்கு ரூ. 25 லட்சம் வசூலிக்கப்பட்டதாம். தம் சீடர்கள் நலனுக்காக இத்தொகையை உபயோகிக்கும்படி ஆகாகான் கேட்டுக்கொண்டாராம்.

“கல்லக்குடி வழக்கு முடிவு— மதுரை மக்கள் கண்டனம்

—— (:) ——

பல்லாயிரம் மக்கள் பங்கு கொண்ட ஊர்வலம் - கூட்டம்

மதுரை, பிப். 3—

கல்லக்குடி வழக்கில் தோழர் கண்ணதாசன், அம்பில் - தர்மலிங்கம் உள்ளிட்ட 22 தோழர்கள் தண்டிக்கப்பட்டதைக் கண்டித்து 31—1—54 மாலை 5-க்கு மதுரை நகர் தி. மு. கழகத்திலிருந்து ஒரு மாபெரும் ஊர்வலம் புறப்பட்டது. ஊர்வலத்தை தோழர் மு. கருணாநிதி துவக்கி வைத்துவிட்டுத் திண்டுக்கல் புறப்பட்டுச் சென்றார்.

“கண்ணதாசனை விடுதலை செய்! அம்பில் தர்மலிங்கத்தை விடுதலை செய்! கல்லக்குடி வீரர்களை விடுதலை செய்!” என்ற பேரொலிகளை முழங்கிக் கொண்டு, ஊர்வலம் முக்கிய வீதிகளைச் சுற்றி புட்டுத் தோப்பு திடல் வந்து சேர்ந்தது.

மாலை 6-30 மணிக்கு புட்டுத் தோப்புத் திடலில் மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. தோழர் என். முத்து தலைமை வகித்தார். தோழர்கள் பி. எஸ். மணியன், எம். அய்யாசாமி ஆகியோர் ஆச்சாரியார் அடக்கு முறை பற்றியும், தி. மு கழகத்தின்மீது சர்க்கார் தொடுத்துள்ள நடவடிக்கைகள் பற்றியும் கண்டித்துப் பேசினார்கள்.

கல்லக்குடி வீரர்களைத் தண்டித்ததைக் கண்டித்தும் அவர்களை விடுதலை செய்யக் கோரியும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

சென்னை சட்ட சபைக்கு ஆசிரியர்கள் மனு

சைகிள் குழு அனுப்ப மாநாட்டில் தீர்மானம்

சேலம், பிப். 4—

சேலம் மாவட்டம் பொம்மிடியில் நடந்த மாவட்ட ஆரம்ப ஆசிரியர் மாநாட்டில் சென்னை சட்ட மன்றம் வரவு செலவு கூட்டத்தின்போது ஆரம்ப ஆசிரியர்களைக்கொண்ட ஒரு சைகில் குழுவை அனுப்பி ஒரு மனுவைச் சமர்ப்பிக்க வேண்டுமென்று தீர்மானிக்கப்பட்டது.

பள்ளி ஆசிரியர்களின் இதர அலுவல்கள்

சர்க்கார் பரிசீலனை

சென்னை, பிப். 2—

ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் ஆசிரியர்களாயிருப்பவர்கள் கிராமாந்திரங்களில் போஸ்ட்-மாஸ்டர் போன்ற இதர வேலைகளைக் கவனிக்கலாமா வென்பதை சர்க்கார் பரிசீலனை செய்துகொண்டிருக்கிறார்கள். சீக்கிரத்தில் இதுபற்றிய சர்க்கார் முடிவு அறிவிக்கப்படும்.

இரத்தக் கொதிப்பிற்கு புது மருந்து

கல்கத்தா, பிப் 2—

நரம்பு துடி துடிப்பையும், இரத்தக் கொதிப்பையும் தணிக்கக் கூடிய ஒரு புதிய மருந்தை ‘சிபா’ மருந்து கம்பெனியார் விற்பனைக்கு வெளியிட்டிருக்கின்றனர். இதற்கு ‘செர்பாஸில்’ என்று பெயர்.

மூளையின் மத்தியிலுள்ள ‘ஹைபாட்லாமஸ்’ என்ற பகுதி வேலை செய்யும் வேகத்தைத் தணிப்பதன் மூலம் மேற்கண்ட நோய்களை இந்த மருந்து குணப்படுத்துகிறது. இந்த மருந்து ஒருவகை மூலிகையிலிருந்து தயாரிக்கப்படுகிறது இம்மூலிகை வெகு காலமாகவே இந்தியாவில் உபயோகத்தில் இருந்து வருகிறது.

களம்பூர் தோழர்கள் வழக்கு

நிரபராதிகளெனத் தீர்ப்பு

வேலூர், பிப். 2—

களம்பூர் பஞ்சாயத்து போர்டு ஆபீசுக்கு தீ வைத்ததாக களம்பூர் விவசாயி சங்கத்தைச் சேர்ந்த என். ராஜு, ஏ. கோவிந்தசாமி, கே. மன்னு ஆகியோர் மீது தொடரப்பட்ட வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட மூவரும் குற்றவாளிகள் அல்லவென்று கூறி விடுதலை செய்யப்பட்டனர்.

இந்த வழக்கை வேலூர் செஷன்ஸ் நீதிபதி எம். அனந்தநாராயணன் விசாரித்து தீர்ப்புக் கூறினார். நீதிபதி தீர்ப்புக் கூறுகையில், போலீஸ் தரப்பு சாட்சியங்கள் நம்பத் தகாதவை என்றார்.

களம்பூர் விவசாயிகளுக்கும் நிலச் சொந்தக்காரர்களுக்கும் தகராறு ஏற்பட்டதால் நிலத்தில் விவசாயிகள் உழுவதை விவசாயி சங்கம் தடுத்துவிட்டதென்றும், இதன் காரணமாக வழக்குத் தொடரப்பட்டதாகவும் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் கூறினர்.

பொதுச் செயலாளர் அண்ணுதுரை சுற்றுப் பயணம்

★

பிப். 5: மாலை கோமளீசுவரன் பேட்டை தி. மு கழக நிதி அளிப்புப் பொதுக் கூட்டம்

„ 6: சென்னை

„ 7: மாலை திருப்பத்தூர் (வ. ஆ) தூத்துக்குடி வழக்கு நிதி அளிப்புக் கூட்டம்

„ 8: கிருஷ்ணகிரி — தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டம்

„ 9: போளூர் (வ. ஆ.) தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டம்

„ 14: தென்னுற்காடு மாவட்டச் சார்பில், விழுப்புரத்தில் தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டம்

„ 15: சென்னையில்—திருமணம்

„ 16 முதல் 19 வரையில்: தஞ்சை மாவட்டம்: நாகப்பட்டணம், மன்னார்குடி, குடவாசல், கும்பகோணம் ஆகிய இடங்களில் தூத்துக்குடி நிதி அளிப்புக் கூட்டங்களுக்கும் அழைக்கப்பட்டிருக்கின்றார்கள்.

„ 21: மதுரை நகர் தி. மு. கழகப் பொதுக் கூட்டம். இரவு-நாடகம்

„ 22: பட்டிவீரன்பட்டி மறைந்த மாவீரர் ஊ. பு அ சௌந்திரபாண்டியன் அவர்கள் முதல் ஆண்டு நிறைவு விழா-இரவு நாடகம்நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வார்.

„ 28 முதல் மார்ச் 3 வரை சேலம் மாவட்டம் சுற்றுப் பிரயாணம்

விழுப்புரத்திற்கு... பொதுச் செயலாளர் அண்ணுதுரை வருகை

★

14—2—54 ஞாயிறு அன்று, தி. மு. கழகப் பொதுச் செயலாளர் அண்ணுதுரைக்கும், மற்ற நால்வருக்கும் விழுப்புரம் தி. மு கழகச் சார்பில் வரவேற்பு நடத்தி, தூத்துக்குடி வழக்கு நிதி அளிக்கப்படும்.

31-வது வட்ட தி.மு.கழக 4-வது ஆண்டு விழா

★

5—2—54 வெள்ளி மாலை 6 மணிக்கு, சென்னை, கோமளீசுவரன்பேட்டை, காஞ்சீபுரம் பச்சையப்ப முதலி தெருவில் (சித்ரா டாக்கீஸ் பின்புறம்) தோழர் ஏ. கோவிந்தசாமி, எம். எல். ஏ. தலைமையில் ஆண்டு விழா நடைபெறும்.

பொதுச் செயலாளர் தோழர் அண்ணுதுரை, தோழர்கள் அ. பொன்னம்பலனார், கோ. இளவரசு ஆகியோர் பேசுவர்.

கூட்டத்தில் தூத்துக்குடி நிதி அளிக்கப்படும்.

இசை : நெடுஞ்சேரலாதன்.

திரு. வி. க. மணி மண்டபம்

கால்கோள் விழா

சென்னை, பிப். 4—

மறைந்த தமிழ்ப் பெரியார் திரு. வி. க. அவர்கள் மணி மண்டப கால்கோல் விழா 5—2—54 காலை 9 மணிக்கு இராயப்பேட்டை பக்தஜன சபையின் திறந்த வெளி அரங்கில், திரு. பி. டி. இராஜன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

சென்னை பிரதமர் திரு. சி. இராஜகோபாலாச்சாரியார் துவக்க விழாவைத் தொடங்கி வைப்பார்

பெயர் மாற்றம்

“நம் நாடு” அலுவலகத்தில் பணியாற்றிவருபவரும் திருக்கோட்டியூர் தோழருமான என். விவேகானந்தன் அவர்களது பெயரை சென்னை மாவட்ட தி மு கழகச் செயலாளர் தோழர் கே. எம். கண்ணபிரான் அவர்களால் மாற்றி “மதிவண்ணன்” என்று சூட்டப்பட்டது.

‘தாமரைச் செல்வி’

இலங்கைத் தோழர் ஆ. ஐயப்பா புதல்விக்கு தோழர் ஆ. க. கதிர்வேல் தலைமையில் ‘தாமரைச் செல்வி’ எனப் பெயர் சூட்டப்பட்டது தோழர்கள் பலர் வாழ்த்திப் பேசினர். இதன் நினைவாக நம் நாடு வளர்ச்சிக்கு ரூ. 2 நன்கொடை அளிக்கப்பட்டது — வரப்பெற்றோம்-நன்றியுடையது—பொறுப்பாளர்.

நோட்டுப் புழக்கம் அதிகரிப்பு எதிரொலி

புது டில்லி, ஜன 2—

1952-ம் ஆண்டில் பொது மக்களிடம் ரூ 95 கோடி வரையில் குறைவுற்றிருந்த நோட்டுப் புழக்கம், 1953-ல், 39 கோடி அதிகரித்திருப்பதாகத் தெரிய வருகிறது. இதைக் குறைப்பதற்கு ரிசர்வ் பாங்கி, ஷெடியூல்டு பாங்கிகளுக்குக் கடன் கொடுக்கும் தொகையில் 11 கோடி ரூபாயைக் குறைத்துவிட்டனர்.

‘நம் நாடு’ வெளியூர் ஏஜண்டுகட்கு

★

‘நம் நாடு’ வெளியூர் ஏஜண்டு தோழர்கட்கு: 1954 ஜனவரி மாதப் பட்டியல் (பில்) அனுப்பியிருக்கிறோம். 10—2—54-க்குள் பில் பாக்கித் தொகையை இங்கு கிடைக்கும்படி அனுப்பி வைக்க வேண்டுகின்றோம்.

அதிகம் பாக்கியுள்ள தோழர்களிடமிருந்து, குறிப்பிட்ட தேதிக்குள் பாக்கித் தொகை வந்து சேராவிட்டால் ‘நம் நாடு’ அனுப்புவதையும் நிறுத்தி வைக்கப்படுமென்பதையும் அறிவித்துக்கொள்ளுகின்றோம்.

ஏஜண்டு இல்லாத வெளியூர்கட்கு, முன்பணத்துடன் (டிபாசிட் தொகையுடன்) விண்ணப்பங்கள் வருவதை மட்டும் அன்புடன் ஏற்றுக்கொள்ளப்படும்.

இராயபுரம், சென்னை 4—2—54

பொறுப்பாளர், ‘நம் நாடு’

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

உழவர் நிலைபற்றி — எஸ். எஸ். ராமசாமி

—o—

சிதம்பரம் மாநாடு திறப்புரை

ஆட்சியாளருக்கு அறிவுறுத்தல்

சிதம்பரம் தாலுகா விவசாய சங்க மாநாடு ஜன. 21-ந் தேதியன்று நடைபெற்றபோது, தோழர் எஸ். எஸ். இராமசாமி அவர்கள் மாநாட்டைத் திறந்து வைத்துப் பேசியபோது குறிப்பிட்டதாவது:—

“விவசாய மக்களின் நலனுக்காக அமைத்துக் கொள்ளும் விவசாய சங்கங்களை, நிலம் படைத்த நிலச் சுவான்தார்கள், இது தங்களுக்கு விரோதமான நிலையமெனக் கருதுகிறார்கள்.

உலக மனிதத்தம் உள்ள மக்கள் சமூகம் நாகரீகப் பாதையை செப்பனிட்டு முன்னேறுகிறது. மக்களின் கவனம், மற்றவர்களை பார்த்து, ‘தாங்களும் மனிதர்கள்; மற்றவரைப் போல நாமும் வாழவேண்டும்’ என்ற எண்ணமும், தேவையும் மிகவடைகிறது. சமூகத்திலே தாழ்வில்லை; உயர்வில்லை என்ற முடிந்த முடிவை கடைபிடிக்கும் காலம் இது. அடங்கிக் கிடப்பவன் ஆளப் பிறந்தவன் என்ற நியதியே இல்லை அறிவு உள்ள யாரும்—விவசாயி முதல் தொழிலாளி வரை—ஆளலாம் என்ற நம்பிக்கை பிறந்து விட்ட காலம் இது. இது ஏன்? அது எப்படி?—என்ற கேள்வி போடும் காலம் இது. பொதுவாக மக்கள் சமூகம் வளருகின்ற — வளர்ந்து கொண்டு வருகின்ற காலம் இது.

விவசாய சங்கங்கள் அரசியல் அடிப்படையில் அமைந்தது அல்ல சகல பகுதி மக்களும், தொழிலாள மக்களும் ஒன்று சேரும் ஸ்தாபனமல்ல; சாதாரணமாக ஏழை விவசாய மக்களின் அன்றாட வாழ்க்கையின் நலத்திற்காகக் கூடி இருக்கும் ஸ்தாபனம் ஆகும்; இதில் ஜாதி வித்தியாசங்கள், கட்சிப் பாகுபாடுகள் நுழைக்கப்படுவதும், அதன் காரணமாக விவசாய மக்கள் பிடிக்கப்பட்டு போட்டி சங்கங்கள் அமைப்பதும் அழகல்ல இம்மாதிரி போட்டி சங்கங்கள் அமைவதால், மக்கள் ஒன்றுபட்ட கோரிக்கையை அடைய முடியாமல் தடைபடுத்தப்படுவார்கள்; எனவேதான், விவசாயி மக்களே! உங்கள் வலிமையை சிதறடிக்காதீர்கள்! சுயநலமிகளின் வலைகளில் சிக்கிப் பிளவுப் பாதையில் இறங்கித் துன்பப் படாதீர்கள்! உங்களுக்குக் கட்சி தேவையல்ல! உண்மையாகவே உங்களின் நலனுக்காகயார் முன் வந்தாலும், ஏற்றவாறு எனது சிந்தித்து, ஒன்றுபட்டு, ஒரே சங்கமாக அமைந்து, உங்கள் நியாயமான கோரிக்கைகளை அடையப் பாடுபடுங்கள்.

மடம், ஆதீனம் கோவில், தர்மம், மைனர்கள் இவர்களுக்குச் சொந்தமான நிலங்களை, அரசாங்கம், குறைந்த குத்தகைக்கு ஏற்றுக்கொண்டு, உழவர்களிடம் குத்தகைக்கு விட்டு வாங்கும் வசதியையாவது செய்து கொடுப்பது, ஒரு வகையில் நன்மை தரும் என நம்புகின்றேன். ஏழை விவசாய மக்களுக்கு இது போன்ற சிறு வசதியை படிப்படியாகச் செய்து வந்தால்தான் பொங்கி எழும் மக்கள் வேகத்தைக் குறைக்க முடியும் என்பதையும், அரசாங்கம் சிந்திக்க வேண்டுகின்றேன்.

அண்மையில், சென்னை அரசாங்கத்தாரால் கொண்டு வரப்பட்ட விவசாயிகள் கடன் வசூல் ஓராண்டு ஒத்திவைப்பு மசோதா சட்டமாக்கப்பட்டதை நீங்கள் அறிந்திருப்பீர்கள். இச்சட்டம், சட்டசபையில் வரும்பொழுது நான் வரவேற்றது மட்டுமல்லாமல் பின்வரும் திருத்தத்தையும் சமர்ப்பித்தேன்.

அதாவது, “இந்தச் சட்டத்தின் கெடுவு காலமான ஓராண்டு முடிந்ததும், பின்னர் கடன் தொகையை மூன்றாகப் பகுத்து, மூன்று முறையாக, மூன்றாண்டு காலத்தில் செலுத்திவிடலாம் என்ற வசதியும் சட்டத்தில் இருக்கவேண்டும்” என்ற திருத்தத்தைக் கொடுத்தேன்; ஆட்சியாளர்கள் இதை அனுமதிக்கவில்லை: நமக்கும் வேறு வழியில்லை.

இந்த என் கோரிக்கை நியாயமானதாகும். 7, 8 ஆண்டுகளாகப் பருவ மழையின்றி, விவசாய மக்கள் பெருந் துன்பத்திற்குளாகி இருந்து வரும்போது, இந்த ஆண்டு முடிந்தவுடன், எந்த விதத்தில் கடன் கொடுக்க இயலும்? தவிரவும், பண்டங்களின் விலைவாசி ஏற்றமுள்ள கடந்த காலத்திலே கடன் கொடுக்க இயலாத விவசாயி, விலைச் சரிவு நாளுக்கு நாள் வளர்ந்து வரும் இதுபோது, எங்ஙனம் ஒரே காலத்தில் கடன் கொடுக்க இயலும்? தவிரவும், கடன் கொடுத்த நபர்—சட்டத்தின் காரணமாக ஆத்திரமடைந்திருப்பவர்—கெடு முடிந்ததும் வசூலிப்பதில் கடுமையாக இறங்கிவிடும் நிலைமையிலிருந்தே மக்கள் மீள வேண்டும் என்ற காரணத்திற்காகத்தான் மூன்று தவணைகள், மூன்று ஆண்டு கெடுக்கள் வேண்டும் என்றேன். இந்தச் சந்தர்ப்பத்தில் என் கோரிக்கையை அரசாங்கம் அனுமதிக்கவில்லை. இதுவும், எதிர்காலத்தில் உங்கள் ஒருமித்த ஆதரவுத் தீர்மானம் மூலமாக சரிப்பட்டுவிடும் என்று நம்புகின்றேன்.

பிகாரிலுள்ள நிலமில்லாத — வீடில்லாத அரிஜனங்களுக்கு உதவ 10 ஆண்டுத் திட்டம் ஒன்றை மாநில சர்க்கார் தயாரித்துள்ளது. இதற்கு 15,0000 செலவாகும் எனத் தெரிகிறது.

கழகச் செய்திகள்

★

திருவண்ணாமலையில் தி.மு.க. பொதுக் கூட்டம்

31—1—54 மாலை 6-15-க்கு, தோழர் ப. உ. சண்முகம், சிற்றுனி-சுப்ரமணியம், அ. ரா. கலீல் ஆகியோர் கார்கான வீதியில் மாணவர்களால் ஏற்பாடு செய்யப்பட்ட கொடியேற்று விழாவில் கலந்து கொண்டனர். தோழர் சிற்றுனி-சுப்ரமணியம் கொடியேற்றி வைத்தார். பின்னர், ஊர்வலமாக வன்னிய குல சத்திரியர் வீதி வழியாகக் கூட்டம் நடைபெறும் சன்னதி வீதிக்கு அழைத்துச் செல்லப் பட்டனர்.

தோழர் க. இராசமாணிக்கம் வரவேற்புரையாற்றினார். தோழர் மா. வேடி தலைமை தாங்கினார். தோழர் அ. ரா. கலீல், சாரங்கபாணி பேசினர்.

அடுத்து தோழர் சிற்றுனி-சுப்ரமணியம், கல்லக்குடி அறப்போர் வழக்கில் 22 பேருக்கு ஆச்சாரியார் சர்க்கார் 1½ ஆண்டு கடுங்காவல் விதித்ததைக் கண்டித்தும் சொற்பொழிவாற்றினார்.

அடுத்து, தோழர் ப. உ. சண்முகம் அவர்கள், வளர்ந்து வரும் தி. மு. கழக மக்கள் சக்தியை அழிக்க எவராலும் முடியாதென்றும், கோவை ஜி. டி. நாயுடு அவர்களின் விஞ்ஞானத் திறமையை ஆளும் வர்க்கத்தினர் பயன்படுத்திக்கொள்ள முன்வராததைக் கண்டித்தும் பேசினார். தலைவர் நன்றி கூறினார்.

கூட்டத்தில் தூத்துக்குடி சதி வழக்கிற்கு உண்டியல் மூலம் வசூலான ரூ. 8—6—6 தோழர் ப. உ. சண்முகம் வசம் ஒப்படைக்கப்பட்டது. (சதி)

சென்னிமலை கிளை தி. மு. கழகம்

கோவை, பிப். 2—

27—1—54 இரவு 9 மணிக்கு செயலாளர் தலைமையில் கழக அலுவலகத்தில் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அச்சமயம் வருகிற மார்ச்சு திங்கள் இறுதியில் கழக ஆண்டு விழாவை நடத்துவதென்றும், விழாவினில் கலந்துகொள்ள தோழர்கள் அண்ணாதுரை, ஈ.வெ.கி. சம்பத், அருண்மொழி, கே. ஆர். ராமசாமி ஆகியோரை அழைப்பதென்றும், இரவு நடைபெறும் நாடகத்திற்குத் தலைமை வகிக்க தோழர் எம். ஜி. ராமச்சந்திரனை அழைப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

தாலிகட்டிப்பாளையத்தில் பொதுக் கூட்டம்

14—1—54ல், தோழர் பா. முத்து தலைமையில் பொங்கல் விழாப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சா. வைத்தமலை, ச. முருகேசன், கி. நடராசன் ஆகியோர் பேசினர்.

• • •

அன்று மாலை ஊத்துக்குளியில் தோழர் வி. கே. சபாபதி தலைமையில்; தோழர் அ. ச. இளங்கோ சொற்பொழிவாற்றினார்.

திருச்சி 20-வது வட்ட தி. மு. கழகம்

31—1—54 காலை 10 மணியளவில் கழகக் கட்டிடத்தில் நடைபெற்ற பொது உறுப்பினர் கூட்டத்தில் 10-1-54ல் நடந்த கழக முதலாவது ஆண்டு விழா வரவு-செலவு கணக்குகள் ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், 14—2—54ல் தேர்தல் நடத்துவது என்றும் முடிவு செய்யப்பட்டது. பின்னர் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

பொன்மலைப்பட்டி தி. மு. கழகம் (கிளை)

29—1—54 மாலை 6½ மணிக்கு கழகக் காரியாலயத்தில் தோழர் எ. கோவிந்தசாமி தலைமையில் கழகப் பொது உறுப்பினர்கள் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் தோழர் எம். என். ராயப்பன் எதிர்பாராத விதமாகக் காலமானதைக் குறித்து இரண்டு நிமிடம் மௌனமாக இருந்தபின், நிர்வாகிகள் தேர்தல பற்றியும், ஆண்டு விழா பற்றியும் தோழர்கள் சி. ராமையன், ஆர். கைலாசம், கே. ராமலிங்கம், சி. என். மணி ஆகியோர் பேசினர்.

இரண்டாவது ஆண்டிக்கு நிர்வாகிகளாகத் செயலாளராக சி. என். மணி; துணைச்செயலாளராக என். சித்தார்த்தன்; பொருளாளராக டி. அப்பாதுரை; மாவட்ட உறுப்பினராக சி. ராமையன், நிதிப் பொறுப்பாளராக எ. கோவிந்தசாமி ஆகியவர்கள் உள்ளிட்ட 15 செயற்குழு உறுப்பினர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

இலங்கை தி. மு. கழகம்

14—1—54ல், அந்தோணி மலைத் தோட்டத்தில் பொங்கல் விழாக் கூட்டம் நடைபெற்றது. தோழர் கருப்பையா தி. மு. கழகக் கொடிக்கு, விளக்கம் தந்தார். தோழர் சின்னையா, அவர்கள் பெரியார், அண்ணாதுரை, இருவரின் படங்களைத் திறந்து வைத்தார். தோழர்கள் சேவுகன், சாத்தமுத்து, அழகர்சாமி ஆகியோர் இயக்கப்பண் பாடினர். தோழர்கள் சங்கரன், மதியூகன், சேவுகதாஸ், பழனி, பமையன், ஆறுமுகம் ஆகியோர் பேசினர்.

முகவை கிளை தி. மு. க.

இராமநாதபுரம், பிப். 3—

31—1—54ல் நடைபெற்ற பொதுக்குழுவில் செயலாளர்: ஏ. என். மணியன், துணைச் செயலாளர்: என். ஆர் தாசன், பொருளாளர்: கோ. அரவொளி, செயற்குழு உறுப்பினர்களாக: எம். சீனிமுகமது, எம். முன்தபா, ஆர். குருசாமி. கே. மன்சூர், என். தருமலிங்கம் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

நன்றியறிவிப்பு

கடலூர், பிப். 3—

திராவிடர் திருநாள் விழாவிற்கு உடலுழைத்தும், உதவியளித்தும் வெற்றியாக்கித் தந்த கடலூர் ஓ. டி. தி. மு. கழகம்; திருப்பாதிரிப்புலியூர் தி. மு. கழகம்; 20-ம் நூற்றாண்டு கலைக் குழு: மஞ்சை நகர் மறுமலர்ச்சி மன்றம்; தேவநகர் தி. மு. கழகம்; வன்னியர் பாளையம் அழகிரி நாடகக் குழு; முத்தமிழ் கலைக் குழு; புதுப்பாளையம் தி. மு. கழகம்; இரண்டு நாள் நிகழ்ச்சிக்காக நியூ சினிமா தியேட்டர் கொடுத்துதவிய தோழர் வி. தங்கராஜ், மற்றும் நகர மன்ற துணைத் தலைவர் தோழர் முருகேசனார், நகர மன்ற உறுப்பினர்களான தோழர்கள் சுந்தரம், சுப்பிரமணியம், அருணாசலம், கைத்தறித் துணி விற்பனை செய்ய கொடுத்துதவிய முருகன் ஸ்டோர்ஸ் உரிமையாளர்களுக்கும், அமைச்சர்களாகவும், தொண்டர் படைத் தலைவர், தொண்டர்களாகவும் பணியாற்றியவர்களுக்கும், மற்றும் நன்கொடை உதவியவர்களுக்கும், விழாவில் கலந்து கொண்ட பொது மக்களுக்கும், விழாவில் கலந்து பேசுத் தொண்டாற்றியவர்களுக்கும், இன்னிசை வழங்கியோருக்கும் நன்றியறிதலை தெரிவித்துக் கொள்ளுகிறோமென விழாக் குழுத் தலைவர் இரா

கழகக் கூட்டங்கள்

★

காங்கயம்

7—2—54 மாலை 6-30 மணிக்கு
இடம்: காந்தி மைதானம்
தலைவர்: எம். வேலுசாமி
பேசுபவர்:
என் வி நடராசன்

★

பரமக்குடி

7—2—54 ஞாயிறு மாலை
தலைவர்: இரா. அ. பரமசிவம்
பேசுவோர்:
இரே. இளம்வழுதி
எம். அய்யாச்சாமி

தூத்துக்குடி சதி வழக்கு நிதி

'பராசக்தி' படம் திரையிடப்படும்

7-2-54 காலை 10 மணிக்கு, சென்னை, சைதாம்பேட்டை நூர்ஜகான் தியேட்டரில், பல முக்கிய நடிகர்களின் தலைமையில் 'பராசக்தி' படம் நடைபெறும்.

அன்று மாலை 6 மணிக்கு, சைதை தர்மராஜா கோயில் தெருவில், ஆண்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெறும். முக்கிய தி. மு. கழகத் தலைவர்கள் பேசுவார்கள்.

தஞ்சை மாவட்ட தி. மு. கழக செயற்குழு கூட்டம்

கும்பகோணம், பிப். 3—

"7-2-54 காலை 9 மணிக்கு, மன்னார்குடி ரயில்வே ரோடு, தோழர் ப. நாராயணசாமி அவர்களின் இல்லத்தில், தஞ்சை மாவட்ட தி. மு. கழக செயற் குழுக் கூட்டம் நடைபெறும். அவ்வமயம், தஞ்சை மாவட்ட தி. மு. கழக 2-வது மாநாடு நடத்த நாள், இடம் ஆகியவைபற்றி முடிவு செய்தல்; மாநாட்டுக்கு வரவேற்புக் குழு அமைத்தல்; செயலாளரால் கொண்டுவரப்படும் இதர முக்கிய பொருள்கள் ஆகியவை பற்றி முடிவு செய்யப்படும். செயற்குழு உறுப்பினர்கள் தவறாது வருமாறு கேட்டுக்கொள்கிறேன்," என்று செயலாளர் தோழர் கே. கே. நீலமேகம் அறிவிக்கிறார்.

சென்னை 17-வது வட்ட தி. மு. கழகம்

பொங்கல் விழா

"7-2-54 மாலை 6 மணியளவில், சூளை, 17-வது வட்டம், 31, கலியாண மேஸ்திரி தோட்டத் தெருவில், தோழர் முகவை ஆர். எஸ். பாண்டியன் தலைமையில் பொங்கல் விழா நடைபெறும். அதுபோது, தேநீர் விருந்து ஒன்று நடைபெறும். எல்லா உறுப்பினர்களும் கலந்துகொள்ளுமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்" என, சு. பாலன் அறிவிக்கிறார்.

இளம்வழுதி அவர்களும், செயலாளர் மு. சீனிவாசனும் அறிவிக்கின்றனர்.

திருப்பத்தூரில்... ஐவர் வரவேற்பு

தூத்துக்குடி சதி வழக்கு நிதியளிப்பு

சி. என். அண்ணாதுரை,
இரா. நெடுஞ்செழியன்,
ஈ. வெ. கி. சம்பத்
கே. ஏ. மதியழகன்,
என். வி. நடராசன்

ஆகியவர்கட்கு 7—2—54ல், திருப்பத்தூர் ஈங்கா வெளியில், தி. மு. கழகச் சார்பில், நகரசபைத் தலைவர் தோழர் வி. எஸ். வீரபத்திரனார் வரவேற்பளிப்பார். தோழர் ஜி. சாமிநாயுடு பி.ஏ., பி.எல்., அவர்கள் தலைமை வகிப்பார். தோழர் இ. எல். இராகவனார், பி.ஏ., பி.எல்., எம். எல். ஏ., அவர்கள் தூத்துக்குடி வழக்கு நிதியை பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்களிடம் அளிப்பார்.

நாமக்கல் வட்ட தி. மு. கழகத் தோழர்கட்கு

"7-2-54 அன்று, நாமக்கல் வட்டக் குழுக் கூட்டம், முசாபரி பங்களாவில் நடைபெற இருப்பதால், கிளைக் கழக செயலாளர்கள் மாலை 2 மணிக்குள் வருகை தர வேண்டுமென கேட்டுக் கொள்ளப்படுகிறது. அது சமயம், நமது வட்டத்தில் தலைவர்களுக்கு வரவேற்பு அளிப்பதும், தூத்துக்குடி சதி வழக்கு நிதி கொடுப்பது பற்றியும் முடிவு செய்யப்படும்" என்று வட்டக் குழு செயலாளர் அறிவிக்கிறார்.

* * *

"7-2-54 மாலை 3 மணிக்கு, முசாபரி பங்களாவில் நடைபெறும் கமிட்டிக் கூட்டத்தில், மாவட்டப் பிரதிநிதி பதவிக்குத் தேர்தல் நடைபெற வேண்டியிருப்பதால், இதையே அழைப்பாகக் கொண்டு வருகைதர வேண்டுகிறேன்" என்று, தோழர் என். பி. செல்லப்பன் அறிவிக்கிறார்.

விருத்தாசலம் வட்டத் தோழர்கட்கு

"7-2-54 மாலை 3 மணிக்கு, எனது இல்லத்தில், வட்டக் கழகம் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு தங்கள் கழகத்திலிருந்து ஒரு உறுப்பினரை அனுப்பித்தரக் கோருகிறேன்," என்று தோழர் சி முனுசாமி அறிவிக்கிறார்.

மதுரை மாவட்ட தி. மு. கழக செயற்குழு கூட்டம்

"10-2-54 காலை 10 மணிக்கு, தேனி நகர கழக அலுவலகத்தில், செயற் குழுக் கூட்டம் 'மாவட்ட மாநாடு' நடத்துவது பற்றி ஆலோசிக்க நடைபெற இருக்கிறது. மாவட்டக் குழு உறுப்பினர்கள் தவறாது வருகை தர வேண்டுகிறேன்," என்று தோழர் தொந்தி அறிவிக்கிறார்.

உங்கள் குறிப்புக்கு!

சென்னை, பிப். 2—

சென்னை மக்கள் தொகை 14 லட்சம் பேர். இதில் 3 லட்சம் பேர்களுக்கு மேல் தினமும் பஸ்களில் பிரயாணம் செய்கிறார்கள்; 374 பஸ்கள் தினமும் விடப்படுகின்றன.

சென்ற ஆண்டு டிராம்கள் திடீரென்று நிறுத்தப்பட்டதால் பஸ் பிரயாணிகள் எண்ணிக்கை 2,50,000-த்திலிருந்து 3 லட்சத்திற்கு மேல் அதிகரித்துவிட்டது.

டிராம்கள் நிறுத்தப்படுவதற்கு முன் 374 பஸ்கள் ஓடிக்கொண்டிருந்தன. சர்க்கார் இத்தொழிலை எடுத்துக் கொள்ளுமுன், 198 பஸ்கள் மட்டுமே ஓடிக்கொண்டிருந்தன.

தினம் சராசரி 86,000 மைல்கள் பஸ்கள் ஓடுகின்றன.

ஆதித்தன் இடத்திற்கு ஜோதி அம்மையார்

மேல் சபைத் தேர்தலுக்குக் காங்கிரஸ் அபேட்சகர்

சென்னை, பிப். 2—

தோழர் எஸ். பி. ஆதித்தன் மேல் சட்ட சபையில் ராஜிநாமா செய்ததால் ஏற்பட்டுள்ள காலி ஸ்தானத்திற்கு சென்னை மதுவிலக்கு மந்திரி ஜோதி வெங்கடாசலம் நியமிக்கப்படுவார் என தெரிய வருகிறது.

இம்முடிவை சட்ட சபைக் காங்கிரஸ் கட்சித் தலைவர் ஆச்சாரியார், தமிழ் நாடு காங்கிரஸ் தலைவர் தோழர் காமராஜருடன் கலந்து பேசி முடிவுசெய்ததாகத் தெரியவருகிறது. (இதில் உள்ள அரசியல் இரகசியம் எதுவோ?—ஆ-ர்.)

ரஸ்தாக்கள் பழுது

சென்னை சர்க்கார் செலவிடும் தொகை

சென்னை மாநிலத்தில், பாதை அபிவிருத்திக்காக மோட்டார் வரிகளால் கிடைக்கும் அளவிற்கு மேலேயே 50 சதவிகிதம் அதிகமாக சென்னை சர்க்கார் செலவிடுகிறது.

திராவிடர் திருநாளில் 500 பேருக்கு உணவு

சென்னை, பிப். 3—

சென்னை செயிண்ட் ஜேவியர் தெரு, 36 எண்ணிலுள்ள அடுப்புக்கரி கடை உரிமையாளர் தோழர் எம். துரை அவர்களால் சுமார் 500 ஏழைகளுக்கு சிறந்த முறையில் உணவளிக்கப்பட்டது.

சௌந்தரபாண்டியன் படிப்பகம் துவக்கம்

26—1—54 காலை 10 மணியளவில், சூளை சென்னகேசவ பெருமாள் கோவில் தெரு, நெ. 25 இல்லத்தில் தோழர் தா. ஞாயமணி தலைமையில் சௌந்தரபாண்டியன் படிப்பகம் துவக்கப்பட்டது. தோழர்கள் மு. மாசிலாமணி செயலாளராகவும், டி. என். சிவராசன் துணைச்செயலாளராகவும், மலர்மன்னன் பொருளாளராகவும், செயற்குழு உறுப்பினர்களாகத் தோழர்கள் கோ. சோழன், கே. வி. நீலம், கெ. வா. சந்திரமோகன், சாரதி, டி. கோவிந்தராசன், பாட்சா, பொன்னுரங்கம், பா. கண்ணன், நெடுமாறன், சின்னசாமி, சந்திரம், கொ. ரத்தினம், ஏகலைவன் ஆகியோர் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால், அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம்) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: சி. என். அண்ணாதுரை, எம். ஏ.